**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8069031

1. District மாவட்டம் : Tiruppur | PS: காவல்நிலையம் V & AC | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 4/2023 | Date: நாள் 04.08.2023.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended by the — Sections பிரிவுகள்: - 7 -
   (iii) Act சட்டம்: PC (Amendment) Act, 2018. — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 13.07.2023 - 12.15 hrs.
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 17.07.2023 - 21.15 hrs.
   31.07.2023 - 15.30 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 4.8.2023. — Time நேரம் 07.45 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் G.D Vol- II — Time நேரம் 07.045 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Sundakkapalayam Village Panchayat office and Complainant house approximately 21km North Ea[st]
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.V. Radhakrishnan — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Venkatachalam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 57/2023 — (d) Nationality : நாட்டினம் Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Business. — (g) Address : முகவரி D.No. 151, Kollankadu, Sundakkapalayam (Po) Uthukuli (Tk) Tiruppur District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   T. Loganathan @ Anand, Panchayat President, Sundakkampalayam Village Panchayat, Tiruppur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP-240-34(Type-2) 90.000 Cps -2T.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.V. Ratlakrishnan 4-08-2023 R. K. [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.08.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Kousalya.
Rank: நிலை ...................... No. எண் .........
Inspector of Police,
V&AC, Tiruppur.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 4/2023/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.கௌசல்யா ஆகிய நான் 04.08.2023-ம் தேதி காலை 07.45 மணியளவில் அலுவலகத்தில் இருந்த போது A.V.ராதாகிருஷ்ணன், த/பெ.வெங்கடாசலம், கதவு எண்.151, கொல்லாங்காடு, சுண்டக்காம்பளையம் (Po), ஊத்துக்குளி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புனர் A.V.ராதாகிருஷ்ணன், த/பெ.வெங்கடாசலம், கதவு எண்.151, கொல்லாங்காடு, சுண்டக்காம்பளையம் (Po), ஊத்துக்குளி தாலுக்கா, திருப்பூர் மாவட்டம். பெறுநர் போலீஸ் இன்ஷ்பெக்டர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். அய்யா, நான் திருப்பூர் மாவட்டம் சுண்டக்காம்பாளையத்தில் என் மனைவி விஜயலச்சுமியுடன் குடியிருந்து வருகிறேன். நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். என்னுடைய மகன் சக்திவேல் திருமணமாகி ஈரோட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறான். ஈரோடு பஸ் ஸ்டேண்டு அருகே வெர்டினரி மெடிக்கல் ஷாப் வைத்துள்ளான். ஈரோடு கோபிசெட்டிபாளயம் அருகே உள்ள சிறுவலூர் எனக்கு சொந்த ஊர் ஆகும். நானும் ஈரோடு திண்டலைச் சேர்ந்த கிருஷ்ணசாமியும் சேர்ந்து கடந்த 2001ம் வருடம் சுண்டக்காம்பாளையம் கிராமம் ரீ.ச.எண்.146/1பி, 146/1ஏ-ல் அமைந்துள்ள ஆண்டவர் ரைஸ் மில் கட்டிடம் மற்றும் இடத்தையும் சேர்த்து 23,240 ½ சதுரடி இடத்தை வாங்கி அதனை குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம். அதன் பின்பு 2004ம் வருடம் மேற்படி கிருஷ்ணசாமியிடமிருந்து மேற்படி சொத்தை நான் விலைக்கு வாங்கி என் பெயரில் குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தேன். அது முதல் நான் மேற்படி ரைஸ் மில்லை நடத்தி வருகிறேன். அருகில் இருந்த காலி இடத்தில் கடந்த 2018ம் வருடம் சுமார் 4500 சதுரடிக்கு தகரத்தில் மேல் கூரை மட்டும் போட்டு மாவு மில் வைத்து தொழில் செய்து வருகிறேன். அதன் பிறகு நான் வாங்கிய மேற்படி இடத்திற்கு அருகில் உள்ள ரீ.ச.எண்.146/2ஏ1ல் 12 செண்ட் இடத்தை திருப்பூரைச் சேர்ந்த பழனிச்சாமி மற்றும் சங்கீதா ஆகியோரிடமிருந்து கடந்த 20.04.2022ம் தேதி ரூ.41,000/-க்கு விலைக்கு வாங்கி அதனை

குன்னத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 2213/2022ன் படி என் பெயரில் பதிவு செய்தேன். பிறகு நான் ஏற்கனவே மேல் கூரை மட்டும் போட்டிருந்தேன். செட்டில் நாலாபுறமும் தகரம் வைத்து அடைத்தும் மேலும் மேற்படி இடத்திலும் புதிதாக வாங்கிய இடத்திலும் சேர்த்து மேலும் சுமார் 2000 சதுரடிக்கு கூரை மற்றும் நாலாபுறத்திலும் தகரம் வைத்து அடைத்தேன். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் என்ற ஆனந்த் எங்க வீட்டிற்கு வந்து என்னிடம் நான் போட்டுள்ள செட் அனைத்திற்கும் பஞ்சாயத்தில் பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்க வேண்டும் இல்லையென்றால் அபராதம் கட்ட வேண்டி வரும் என்று சொல்லி சீக்கிரம் பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்க சொன்னார். அதனால் நான் கடந்த 13.07.2023ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து ஆபிஸ் போய் பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் என்ற ஆனந்திடம் பில்டிங் பிளான் அப்ரூவலுக்கு மனு கொடுப்பது சம்பந்தமாக கேட்ட போது அவர் என்னிடம் 2000 சதுரடிக்கு வரைக்குத்தான் அப்ரூவல் கொடுக்க தனக்கு அதிகாரம் இருப்பதாகவும் அதனால் 2000 சதுரடிக்குள் வருமாறு தனித்தனியாக 4 மனுக்கள் கொண்டு வந்து பஞ்சாயத்து செக்கரெட்ரி அமிர்தலிங்கத்திடம் கொடுக்கும்படியும் அப்போது தான் எனக்கும் அவருக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்காது என்று சொன்னார். பிறகு அவர் என்னிடம் தான் பில்டிங் பிளான் அப்ரூவல் தருவதற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணம் போக தனக்கு தனியாக ரூ.3,60,000/- தர வேண்டும் என்றார். நான் என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொன்னதற்கு அவர் 30,000/- குறைத்து கொண்டு ரூ.3,30,000/- தரும்படி கேட்டார். நான் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். பிறகு கடந்த 17.07.23ம் தேதி இரவு சுமார் 9.15மணியளவில் பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் எங்க வீட்டிற்கு வந்து என்னிடம் ஏன் இன்னும் பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்க முயற்சி பண்ணல, சீக்கிரம் மனு கொடுங்கன்னு சொன்னார். நான் அதற்கு இன்ஜினியரிடம் புளூ பிரிண்டு போட்டுத் தர சொல்லியுள்ளேன். அவர் போட்டுத் தந்ததும் அதை பஞ்சாயத்து ஆபிஸில் கொண்டு வந்து தருகிறேன் என்று சொன்னேன். பிறகு அவர் என்னிடம் நான் கேட்ட பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணத்தை வேண்டுமானால் தற்போது கட்டி விடுகிறேன். நீங்கள் கேட்கும் பணத்தை பிறகு ரெடி செய்து தருகிறேன் என்று சொன்னதற்கு அவர் நான் கேட்ட பணத்தை முதலில் கொடுத்தால் தான் பில்டிங் பிளான்

அப்ரூவலுக்கு 4 மனுக்களுக்கும் தனித்தனியாக அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு என்று சொல்வேன் என்றும் அதன் பிறகு அரசுக்கு பணத்தை கட்டி ரசீதை பெற்றுக் கொள்ளும்படியும் சொன்னார். உங்களால் உடனடியா பணம் ரூ.3,30,000/-ஐ முழுவதும் தர முடிலைன்னா முதல் தவணையா பாதி பணத்தை ரெடி செய்து கொடுக்கும்படியும் பில்டிங் அப்ரூவல் ரெடி செய்யும்போது மீதி பணத்தை தரும்படியும் கண்டிப்புடன் சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு நான் இன்ஜினியரிடம் 137 சதுர மீட்டருக்கு பில்டிங் பிளான் அப்ரூவலும், 130.36 சதுர மீட்டருக்கு பில்டிங் பிளான் அப்ரூவலும், 43 சதுர மீட்டருக்கு பில்டிங் பிளான் அப்ரூவலும் மற்றும் 180 சதுர மீட்டருக்கு பில்டிங் பிளான் அப்ரூவலும் என புளூ பிரிண்டு போட்டு வாங்கிக் கொண்டு தனித் தனியாக 4 மனுக்களை தயார் செய்து கொண்டு கடந்த 27.07.2023ம் தேதி மதியம் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து ஆபிசிற்கு போனேன். பஞ்சாயத்து ஆபிசில் செக்கரெட்ரி அமிர்தலிங்கத்தை பார்த்தபோது அவர் அங்கு இல்லாததால் அலுவலகத்தில் இருந்த பெண் ஒருவரிடம் எனது மனுக்களை கொடுத்து செக்கரெட்ரியிடம் கொடுத்துவிடுமாறு சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். நான் போனை சார்ஜரில் போட்டு விட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது மதியம் சுமார் 2.40 மணியளவில் போன் வந்தது. நான் சாப்பிட்டுக் கொண்டிருந்ததால் போனை எடுக்கவில்லை. சாப்பிட்டு முடித்து வந்து போனை பார்ததபோது செக்கரெட்டரி அமிர்தலிங்கம் கூப்பிட்டு இருந்ததால் நான் செக்கரெட்டரி அமிர்தலிங்கத்திற்கு போன் செய்து பேசினேன். அப்போது அவர் என்னிடம் சாயங்காலம் 4 மணிக்கு மேல் பஞ்சாயத்து தலைவர் ஆபிசுக்கு வருவார். வந்து பார்க்கும்படி சொன்னார். நானும் அன்று மாலை சுமார் 4½ மணி வாக்கில் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து ஆபிசுக்குக்கு போனேன். அங்கு பஞ்சாயத்து ஆபிஸ் பூட்டி இருந்ததால் திரும்பி வந்துவிட்டேன். பிறகு 30.07.2023ம் தேதி மாலை சுமார் 5 மணிவாக்கில் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து செக்கரட்டரி அமிர்தலிங்கம் என் வீட்டிற்கு வந்தபோது நான் வீட்டில் இல்லை. அதனால் அவர் எனக்கு போன் செய்து சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் பில்டிங் பிளான் அப்ரூவலுக்காக நான் கொடுத்த மனுக்களை என்னிடம் கொடுத்துவிட்டு வருமாறு சொன்னதாகவும் நான் வீட்டில் இல்லாததால் நான்கு (4) மனுக்களையும் என் மனைவியிடம் கொடுப்பதாக என்னிடம் சொல்லிவிட்டு கொடுத்துவிட்டு சென்றுள்ளார். மறுநாள் 31.07.2023ம் தேதி நான் பில்டிங் பிளான் அப்ரூவலுக்கான எனது 4 மனுக்களையும் எடுத்துக் கொண்டு

மாலை சுமார் 3.30மணியளவில் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து ஆபிஸ் சென்று பிரசிடெண்ட் லோகநாதன் அவர்களை சந்தித்து பில்டிங் பிளான் அப்ரூவலுக்காக நான் கொடுத்த மனுக்களை ஏன் செக்ரட்டரிகிட்ட கொடுத்து திருப்பி கொடுத்திட்டீங்கன்னு கேட்டேன். அதற்கு அவர் இப்படித்தான் செக்ரட்டரி இல்லாதப்ப ஆபிசில் இருக்கறவங்ககிட்ட வெறும் மனுக்களை மட்டும் கொடுத்துட்டு போவீங்களா என்று திட்டி நான் கேட்ட பணத்தை கொண்டு வந்திருக்கீங்களான்னு கேட்டார். அதற்கு நான் என்னிடம் கையில் பணம் 1,00,000 தான் உள்ளது என்று சொன்னேன். அதற்கு பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் முதல்ல அந்த பணத்தை கொடுங்கள் என்று என்னிடமிருந்து கேட்டு வாங்கிக் கொண்டார். எனது 4 மனுக்களையும் நான் அவரிடம் கொடுத்தபோது மீதி பணம் 2,30,000/-யை எப்போது தருவீங்க எனக் கேட்டார். அதற்கு நான் என்னால் உடனடியாக அவ்வளவு பணத்தை ரெடி செய்ய முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் அதெல்லாம் எனக்கு ஒன்னும் தெரியாது. ஒரு வாரத்திற்குள் பணம் 2,30,000/-ஐ தரலீன்னா உங்களோட பில்டிங் பிளான் அப்ரூவலுக்கான மனுக்களை திருப்பி அனுப்பிடுவேன். பிறகு பில்டிங் பிளான் அப்ரூவல் வாங்க முடியாதுன்னு சொல்லி எனது 4 மனுக்களையும் வாங்கிக் கொண்டார். அதன் பிறகு நான் அங்கிருந்து வந்துவிட்டேன். சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் என்ற ஆனந்த் அவர்கள் எனது பெயரில் பில்டிங் பிளான் அப்ரூவல் கொடுக்க என்னிடம் லஞ்சமாக கேட்கும் பணம் 2,30,000/-ஐ கொடுப்பதற்கு எனக்கு விருப்பமில்லாததால் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து பிரசிடெண்ட் லோகநாதன் என்ற ஆனந்த் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் சுண்டக்காம்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்தில் பில்டிங் பிளான் அப்ரூவலுக்காக நான் கொடுத்த 4 மனுக்களின் நகல்களை இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/- xxxx A.V.Radhakrishnan 04.08.2023 Sir, Received the complaint on 04.08.2023 at 07.45 hrs and conducted enquiry between 07.45 hrs to 08.00 hrs and after getting approval from DVAC, Chennai, registered a case in Tiruppur V&AC Cr.No.04/2023/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 at 08.30 hrs. Sd/- xxxx (R.Kousalya). Inspr. V&AC, TPR, 04.08.2023

The original FIR along with original written complaint of Tr.A.V.Radhakrishnan, S/o.Venkatachalam, D.No.151, Kollankadu, Sundakkampalayam (Po), Uthukuli Taluk, Tiruppur District with xerox copies of 4

applications are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(R.Kousalya),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.